**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | Miscellaneous | : |
| Preliminary Register | : | Case No. | : **S.C.19/2022** |
| Sessions | : | | |

| | | |
|---|---|---|
| Deposition of witness for : | Prosecution | : **P.W. 9** |
| | Defence | : **D.W.** |
| | Court | : **C.W.** |

| **Name :** | சோலைகண்ணு | **S/o.(or)W/o. :** | |
|---|---|---|---|
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **02.09.2025**

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் பெரியம்மாபாளையத்தில் குடியிருக்கிறேன். விவசாயம் செய்கிறேன். வழக்கில் இறந்துபோன கருப்பையாவை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். எனக்கு வழக்கு சம்மந்தப்பட்ட விவரம் தெரியாது. கருப்பயை எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது. எதிரியை போலிசார் விசாரித்த விவரம் எனக்கு தெரியாது. எனக்கு எழுத படிக்க தெரியும். அதிகம் படிக்க தெரியாது. கொலை நடந்தது சம்மந்தமாக நான் வேடிக்கை பார்க்க போனேன். போலிசார் அப்போது என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்து. அது அ.சா.ஆ.6 ஆகும். கைப்பற்றுதல் மகசரில் உள்ளது என்னுடைய கையெழுத்து இல்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**இந்நிலையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

22.01.2021ம் தேதி இரவு எதிரி தினேஷ்குமார் என்பவர் கருப்பயையாவை குத்தி கொலை செய்துவிட்டதாக கேள்விபட்டேன் என்றும், அதன்பின்னர் 23.01.2021ம் தேதி மதியம் நானும், எங்கள் ஊரை சேர்ந்த கந்தசாமியும் மேலமாத்தூர் பஸ்டாப்பில் நின்று கொண்டுஇருந்தபோது குன்னம் காவல்நிலைய போலிசார் எங்கள் இருவரையும் அழைத்து எங்கள் முன்னிலையில் எதிரியை விசாரித்தபோது அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதில் நாங்கள் இருவரும் சாட்சி கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரியை காட்டிற்கு அழைத்து சென்றபோது சுமார் 21 செ.மீ நீளம் கொண்ட கத்தி மற்றும் ஊதா , மெருண், வெள்ளை கட்டம்போட்ட கைலி, மற்றும் கரும்ஊதா கலரில் சந்தன கலர் முழு கை சட்டையை எதிரி அடையாளம் காட்டி எங்கள் முன்னிலையில் ஆஜர் படுத்தினார் என்றும், அதைஆய்வாளர் மகசரில் கைப்பற்றினார் என்றும், அதில் நாங்கள் இருவரும் கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல. தற்போது எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

**<u>மறுவிசாரணை</u>**: இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.